குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி) – தஞ்சாவூர் 613007.

தமிழ்த்துறை

இளங்கலை இரண்டாமாண்டு

அற இலக்கியம் - அலகு – 3 பாடக்குறியீட்டு எண் : 18K3T05

**1. நான்மணிக்கடிகை – ஆசிரியர் – விளம்பிநாகனார்**

நான்கு வகையான மணிகளால் ஆன ஒரு வகை அணிகலன் போன்று ஒவ்வொரு பாடலிலும் நான்கு நான்கு கருத்துக்களால் ஆன பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன. கடவுள் வாழ்த்துப் பாடலுடன் 106 வெண்பாக்களால் ஆன இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்நூலினை இயற்றியவர் விளம்பிநாகனார் ஆவார்.

**1) பிறரது தீமைகளைக் கறுவாமை வேண்டும் என நான்மணிக்கடிகை கூறுவன யாவை?**

பிறர் செய்யும் தீமைகளை நினைந்து நினைந்து கறுவிக்கொண்டே இருத்தல் கூடாது. ஆனால், அவர் செய்த நன்மைகளை மறவாமை வேண்டும். சினங்கொள்தலைத் தவிர்த்தல் வேண்டும். முற்போக்கினைத் தடுக்கும் தவறான செயல்களை ஒழித்தல் வேண்டும் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது.

**2) எவ்வெவெற்றால் எவ்வெவெவை உண்டாகும் என்று விளம்பிநாகனார் கூறுகிறார்?**

வளப்பாத்தி எனும் ஈகையால் செல்வம் உண்டாகும். உற்றார் உறவினர்க்கு இனிய சொற்களால் மகிழ்ச்சி உண்டாகும். கண்ணோட்டம் எனும் நடுநிலை இன்மையால் கடுஞ்சொற்களும் பகைமையும் உண்டாகும். யாசகம் வாங்கி உண்ணும் நிலை வறுமையால் உண்டாகும்.

**3) எவை இல்லாமை பாழ் என்கிறது நான்மணிக்கடிகை?**

நல்ல மனைவி இல்லாத வீடு பாழாகும். தோழமை இல்லாத திசை பாழாகும். அறிவிற்சிறந்த மூத்தோர் இல்லையெனில் அவை பாழாகும். கல்வி அறிவற்ற வெற்றுடம்பு பாழாகும்.

**4) மழை இன்றி மக்கள் இல்லை என நான்மணிக்கடிகை கூறும் செய்தி யாது?**

மழை இல்லையேல் உலக மக்களுக்கு நலமில்லை. தவம் செய்வோர் இல்லையேல் மழை இல்லை. முறையான அரசன் இல்லையேல் தவம் செய்வோரும் இல்லை. இல்லற நெறியில் வாழும் மக்கள் இல்லையேல் அரசனும் இல்லை என்கிறது நான்மணிக்கடிகை.

Scanned with CamScanner

***5) நான்மணிக்கடிகை எவற்றையெல்லாம் குற்றம் என்கிறது?***

இளமைப் பருவத்தில் கல்வி கற்காமை, பொருளற்றபோழ்து கொடுக்கும் தன்மை, சுற்றத்தார் இல்லாத காலத்தில் பகைவரிடம் சினம் கொள்தல், அன்பில்லாத பிறரது இருப்பிடங்களில் உணவு உண்ணுதல் ஆகியவை குற்றம் என்கிறது நான்மணிக்கடிகை.

***************

2. **திரிகடுகம்** - ஆசிரியர் நல்லாதனார்.

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துப் பொருட்கள் உடல் நலத்திற்கு நன்மைபயப்பது போல் இந்நூலில் அமைந்துள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் அமைந்திருக்கும் மூன்று மூன்று கருத்துக்கள் வாழ்க்கையில் நன்மை தருவனவாகும். பெருமாள் வழிபாடு இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைந்துள்ளது. 100 வெண்பாக்களைக் கொண்டுள்ள இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.

***1) திரிகடுகம் போலும் மருந்து எவை?***

நற்பண்புகள் நிறைந்த கற்புடை மகளிரை மணப்பதும், குற்றமற்ற பழைமையான குடியில் தோன்றுவதும், சொற்களின் குற்றங்களை நீக்கியுரைக்கும் கேள்வி அறிவு நிறைந்தவர்களுடனான நட்பும் ஆகிய இம்மூன்றும் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியன கலந்த மருந்தினைப் போல நோய்நீக்கி நலம் தருவனவாகும்.

***2) மேன்முறையாளர் தொழிலாக திரிகடுகம் கூறுவன யாவை?***

தம்முடைய குடிப்பிறப்பின் பெருமைக்குக் களங்கம் ஏற்படாதவாறு ஒழுக்கத்துடன் நடத்தலும், பண்புடைய பெரியோரின் சொற்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் ஏவியப் பணிகளைச் செய்தலும், நான்மறை கற்றுணர்ந்த பெரியாரின் வழியில் செல்லுதலும் ஆகிய இம்மூன்றும் மேன்முறையாளர்களின் தொழிலாகத் திரிகடுகம் கூறுகிறது.

***3) அறியாமையால் வரும் கேடுகள் யாவை?***

கற்றறியாத மூடரோடு நட்புபாராட்டல், மன உறுதிகொண்ட மனைவியை தடிகொண்ண்டு தாக்குதல், சிற்றறிவு கொண்ட தீயோரைத் தம் வீட்டிற்குள் அழைத்துச்செல்லுதல் ஆகியன அறியாமையால் வரும் கேடுகளாக திரிகடுகம் கூறுகிறது.

***4) சாகவேண்டியவனின் செயல்களாக திரிகடுகம் எவற்றைக் குறிப்பிடுகிறது?***

பகைவர்களுக்கு முன்பாக செல்வச் செழிப்புக்காட்டுதல், மாடுகளின் தொகுதிக்குள் கையில் கோலில்லாமல் செல்லுதல், முன்பு பகையாக இருந்த ஒருவனிடம்

Scanned with CamScanner

நட்பு பாராட்டல் ஆகிய செயல்கள் சாகவேண்டியவனின் செயல்களாகக் கெடுதியை ஏற்படுத்தும் என்று திரிகடுகம் குறிப்பிடுகிறது.

**5) அருந்துயரம் காட்டும் நெறியாக திரிகடுகம் கூறுவன யாவை?**

பழக்கமில்லாத ஆறு முதலான துறைகளில் இறங்குதல், அன்பில்லாத ல்பெண்களோடு உடலின்பம் கொள்ளுதல், வேற்றூர் சென்று பிறருக்கு விருந்தினராக வருத்தமுண்டாகும்படி தங்குதல் ஆகிய செயல்கள் அருந்துயரம் காட்டும் நெறிகளாம் என்று திரிகடுகம் கூறுகிறது.

***********************

*3.* **ஆசாரக்கோவை – ஆசிரியர் – பெருவாயின் முள்ளியார்**

நல்ல பழக்கவழக்கங்களை மக்களுக்கு கற்பிக்கும் நோக்கில் எழுதப்பட்ட இந்நூலில் *100* வெண்பக்கள் அமைந்துள்ளன. குறள் வெண்பா, நேரிசை வெண்பா உள்ளிட்ட பல்வேறு வெண்பாக்களைய்டைய இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவார்.

*1)* ஒழுக்கம் பிழையாதவர் அடையும் உறுதியாக ஆசாரக்கோவை கூறுவன யாவை?

நற்குடியில் பிறத்தல், நீண்ட வாழ்நாளினைக் கொண்டிருத்தல், பொருட்செல்வம், அழகுடைமை, சொற்களில் மேன்மை பெறுதல், நிலத்திற்கு உரிமையாதல், கல்வியில் சிறப்புற்றிருத்தல், நோயற்ற வாழ்வு ஆகிய எட்டும் ஒழுக்கத்தில் தவறாத உறுதி கொண்டவர் பெறுவர் என்கிறது ஆசாரக்கோவை.

*2)* தன்னுடல் போல் போற்றத்தக்கவை எவை ?

நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு ஆகிய ஐம்பூதங்களையும், பார்ப்பாரையும், பசுக்களையும், திங்களையும், ஞாயிற்றையும் தம் உடம்பு போல கருதிப் போற்றவேண்டும் என்கிறது ஆசாரக்கோவை.

*3) & 4)* உணவு உட்கொள்ளும் முறைகளாக ஆசாரக் கோவை கூறுவன யாவை?

உணவு உட்கொள்வதற்கு முன்பு நன்றாகக் குளித்து, கால்கைகளைக் கழுவி, வாய்க்கொப்பளித்து, வாயை நன்றாகத் துடைத்து உணவு உண்ணும் உண்கலத்தைச் சுற்றிலும் தண்ணீர்த் தெளித்து அதன் பிறகே உண்ணவேண்டும். மேலும், கிழக்கு திசை நோக்கி அமர்ந்து, கண்துஞ்சாமல், அங்குமிங்கும் ஆடாமல், வேறு எவற்றிலும் எண்ணம் கொள்ளாமல், உணவினைச் சிந்தாமல் இறையருளை வேண்டியவாறு உண்ண வேண்டுமென்று ஆசாரக் கோவை கூறுகிறது.

Scanned with CamScanner

*5) வாய் துப்புரவு செய்வகைக் குறித்து ஆசாரக்கோவை கூறுவன யாவை?*

உணவு உண்டபிறகு வாயில் நீரூற்றி உட்புகாதவாறு நன்றாக் கொப்பளித்து, எச்சில் அறும்படி வாயை நன்கு தூய்மை செய்து மூன்று முறை நீர் குடித்து முகத்தை நன்கு கழுவி தூய்மை செய்தல் பெரியோர் அறிந்துரைத்த ஒழுக்கங்களாக ஆசாரக்கோவை கூறுகிறது.

************************

**ஏலாதி – ஆசிரியர் – கணிமேதாவியார்**

ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு வகையான மூலிகைகளின் கலவை உடல் நோய் தீர்க்கும் மருந்தாகும். அது போல் இந்நூலில் அமைந்துள்ள ஒவ்வொரு பாடலிலும் ஆறு கருத்துக்கள் அமைந்துள்ளன. அவற்றைப் பின்பற்றினால் வாழ்வு சிறக்கும் என்பது இந்நூல் வழங்கும் செய்தியாகும். 80 வெண்பாக்கள் அமைந்துள்ள இந்நூலின் ஆசிரியர் கணிமேதாவியார் ஆவார்.

***1) எளிது என்றும் அரிது என்றும் ஏலாதி குறிப்பிடுவன யாவை?***

எல்லோருக்கும் தவம் செய்தல் என்பது எளிதாகும். ஆனால், கொடையுள்ளத்தோடு ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பது அரிதாகும். சான்றோர் தாம் குற்றம் புரிவது அரிது. நல்வழி செல்தல் எளிது. குற்றமற்ற இன்ப நெறியினின்று ஒருவன் விலகிச்சென்றால் மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பது எளிதாகும். ஆனால், அப்பிறவித் துன்பத்திலிருந்து நீங்குவது அரிதாகும் என்று ஏலாதி குறிப்பிடுகிறது.

***2) கற்றறிந்த சான்றோருக்கு ஒப்பாவன யாவை?***

பிறரது துன்பம் போக்குதல், பிறரை இகழாதிருத்தல், குற்றமிழைக்கும் கீழ்மக்களோடு நட்புகொள்ளாதிருத்தல், எல்லோருக்கும் பசித்துன்பத்தைப் போக்குதல், பெரியோர் பழிக்கும் செயல்களை நீக்குதல், எல்லோரையும் ஈர்க்கும் இனிய சொற்களைப் பேசுதல் ஆகிய பண்புகளை ஒருவன் பெற்றிருத்தல் சான்றோருக்கு ஒப்பாவனவாம்.

***3) யாருக்கு நல்ல பண்புகள் தாமே வந்து சேரும் என்று ஏலாதி கூறுகிறது?***

தம்க்காகவோ தம் தோழனுக்காகவோ பொய்யுரையாமல் என்றும் உண்மையே பேசுபவன், தனக்கென்று யாதொரு பொருள் மீதும் பற்று வைக்காமல், பெண்களின் சொற்களைப் பின்பற்றாமல், எவ்வகையிலும் செருக்கு கொள்ளாதிருப்பவனுக்கு நல்ல நூல்களின் பண்புகள் தாமே வந்து சேரும் என்று ஏலாதி கூறுகிறது.

***4) தாயைப் போல எண்ணத்தக்கவன் இயல்புகளாக ஏலாதி கூறுவன யாவை?***

Scanned with CamScanner

புலன் இன்பங்களுக்கு அடிமையாகாமல் மன உறுதியுடன் அமைந்த நிறையுடைமை, நற்பண்புகள் நிறைந்த நீர்மையுடைமை, வறியோருக்கு வழங்கும் கொடையுள்ளம், பிறர் செய்யும் தீங்கினைப் பொறுத்துக்கொள்ளும் பொறையுடைமை, பொய்பேசுதலை ஒழித்து, புலால் உண்ணுதலை மறுக்கும் பண்புகள் நிறைந்திருக்குமானால் அவன் தாயைப் போல எண்ணத்தக்கவன் ஆவான் என்று ஏலாதி கூறுகிறது.

***5) பண்டிதராய் வாழ்வார் பயின்று என்று கணிமேதாவியார் யாரைக் குறிப்பிடுகிறார்?***

நூல்களைத் கற்றுத் தேர்ந்தவர்களை கற்றது உணரார் என எண்ணாமலும், உறவினர் நண்பர்களை அன்பில் உயர்வு தாழ்வு கொண்டு கருதாமலும், பொருளற்றாருக்கு உணவும், தங்க இடமும், உடுத்த உடையும் கொடுத்து ஆதரிப்பவர் பண்டிதராக இவ்வுலக மக்களால் எண்ணப்படுவார் என கணிமேதாவியார் கூறுகிறார்.

**********************

*அலகு – 4*

**இன்னா நாற்பது – கபிலர்**

வாழ்க்கையில் எவையெல்லாம் துன்பம் தருவன என்பவற்றைத் தொகுத்து ஒவ்வொரு பாடலிலும் அழகுற 3அமைக்கப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்துச் செய்யுளோடு 41 வெண்பாக்களைக் கொண்டுள்ள இந்நூலின் ஆசிரியர் கபிலர் ஆவார்.

**பாடக்குறிப்புகள்**

***31) பண்ணமைந்த யாழின கீழ் ….***

பொருத்தமற்ற இசைக்கூறுகளால் யாழெடுத்துப் பாடுதல் பெரிதும் துன்பம் தரும்.

சோதிடம் அறியாதவர் நிகழ்வு நாள் குறித்துத் தருதல் துன்பமாகும்.

ஒழுங்கற்ற மத்தளத்தின் ஓசை துன்பம் தரும்.

***32) தன்னைத்தான் போற்றாது …..***

புலனடக்கத்தோடு விளங்கி தன்னைத்தானே காத்துக் கொள்ளாதல் மிகுந்த துன்பம் தரும்.

ஒருவருடைய குறைகளை நேரில் கூறாமல் புறத்தே கூறுவது துன்பம் தரும்.

நற்பண்பு இல்லாதவர்களுடைய நட்பு துன்பம் தரும்.

தொன்மையான பழங்குடியினர் செல்வம் இன்றி கெடுதல் துன்பமாகும்.

***33) கள்ளுண்பான் …***

கள்ளுண்பான் கூறும் சொல் துன்பம் தரும்.

முள்மிகுந்த காட்டில் நடத்தல் மிகுதியான துன்பம் தரும்.

Scanned with CamScanner

வெள்ளத்தில் சிக்கிய விலங்கைக் காப்பாற்றாமல் கைவிட்டு கொல்லுதல் துன்பமாகும்.

வஞ்சக எண்ணங்கொண்டோரின் நடபு துன்பம் தரும்.

*34) ஒழுக்கமிலாளர் ….*

ஒழுக்கக் கேடானவர்களோடு உறவு இருப்பதாகக் கூறுதல் துன்பம் தரும்.

பெருமை மிகுந்த நூல்களை விரும்பி கற்காதவர் துன்பம் அடைவர்.

அறமற்ற இழிவான தொழில்களைச் செய்பவர் நட்பு துன்பம் தருவதாகும்.

நல்லவர்களால் புறக்கணிக்கப்பட்ட நாட்டில் வாழ்தல் துன்பமாகும்.

*35) எழிலி உறை நீங்கி ….*

மழை மேகம் மழை தரவில்லையாயின் இவ்வுலகத்தாருக்குத் துன்பம் நேரிடும்.

புல்லாங்குழல் அல்லாத பிற மரத்தின் ஓசை மிக்க துன்பம் தரும்.

குழந்தைகள் நோயுறுதல் துன்பமாகும்.

அழகானவன் அறிவற்றவன் என சொல்லுதல் துன்பமாகும்.

*36) பொருளிலான் ….*

பொருளற்றவன் பிறருக்கு பொருளுதவி செய்ய விரும்புதல் துன்பம் விளைவிக்கும்.

மாடங்கள் நிறைந்த பெரு நகரம் பொருளின்றி இருத்தல் துன்பமாகும்.

பிறர் வீட்டில் காத்திருந்து உணவு உண்ணுதல் துன்பமாகும்.

கேடுவந்தபோது கைவிட்டு விலகும் நட்பு துன்பமாகும்.

*37) நறிய மலர் பெரிது நாறாமை …*

நல்ல மலரானது மிகுந்த மணம் தரவில்லையெனில் துன்பமாகும்.

பழக்கமற்ற நீர்நிலைகளில் இறங்கிச் செல்லுதல் துன்பமாகும்.

கல்வியறிவற்றவன் அறிவுடையோரால் வினவப்படுதல் துன்பமாகும்.

சிறியவர்களிடம் கொள்ளும் சினம் துன்பமாகும்.

*38) பிறன் மனையாள் ….*

பிறன் மனைவியைக் காமுற்று பிந்தொடர்தல் கேடு விளைவிக்கும்.

வீரமில்லாத அரசன் போர்க்களத்துக்குச் செல்லுதல் துன்பமாகும்.

விரைந்து செல்லும் குதிரைமீது கலனை இல்லாத வெறும்புறத்தில் ஏறுதல் துன்பம் தரும்.

அறிவும் திறமையும் அற்றவன் செய்யும் செயல் துன்பமாகும்.

*39) கொடுக்கப் பொருளில்லான் …*

பொருளற்றவன் ஈகைத்தன்மை துன்பமாகும்.

கடித்துண்ணும் பாக்கில் கல் இருத்தல் துன்பம் தரும்.

Scanned with CamScanner

பரிசில் கொடுக்கப்படாமல் புலவன் புறக்கணிக்கப்படுவது துன்பமாகும்.

தடை ஏற்யேற்படும் காலத்துள்ளும், பொருள் பெற்ற காலத்துள்ளும் பாடாமல் விடுதல் துன்பமாகும்.

***40) அடக்கமுடையவன் …***

ஐம்பொறிகளை அடக்கியாளும் அடக்கமுடையவன் தன்னைத் தானே பெருமிதம் பேசுதல் துன்பம் தரும்.

முயற்சியற்றவன் தன்னையே மதிக்கும் செயல் துன்பமாகும்.

பிறர் அடைக்கலமாய் வைத்த பொருளைப் பறித்துச் செல்லுதல் துன்பமாகும்.

பெரியோர் அடக்கமுயன்றும் அடங்காதார் சொல் துன்பமாகும்.

*****************

**இனியவை நாற்பது – ஆசிரியர் – பூதஞ்சேந்தனார்**

கடவுள் வாழ்த்துப் பாடலுடன் 41 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலில் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத இனிமையானவற்றைப் பாடல்தோறும் பாடியுள்ளார் இந்நூலாசிரியர் பூதஞ்சேந்தனார். இன்னா நாற்பதிற்கு மாற்றாக இப்பாடல்கள் புனையப்பட்டன என்று கருதப்படுகிறது.

*21) பிறன் கைப்பொருள் …..*

பிறரது கைப்பொருளைப் பறித்துக்கொள்ளாமல் வாழ்வது இனியது.

அறச்செயலகளைச் செய்து அறமற்றவைகளைத் தவிர்த்து வாழ்வது நல்லது.

மாட்சிமைப்படாத அறிவற்றவர்களை மறந்தும் சேராது வாழ்வது இனியதாகும்.

*22) வருவாய் அறிந்து ….*

தமது வருமானத்தின் அளவறிந்து பிறருக்கு ஈகை புரிவது நல்லது.

பிறருக்கு உரிமையுள்ள ஒன்றன் மீது விருப்பம் கொள்ளாதிருத்தல் நன்று.

பெரும் பயனைத் தருவதாயினும் தாம் விரும்பிய ஒன்றை ஆராயாமல் செய்யாது, தம் இயல்பிலிருந்து வேறுபடாமல் வாழ்வது இனிமையானதாகும்.

*23) காவோடு அறக்குளம் தொட்டான் ….*

சோலைகளை உருவாக்கலும் குளம் தோண்டி நீர்வளம் பெருக்கலும் நன்மை விளைவிக்கும்.

அந்தணராகிய அறவோருக்குப் பசுவும், பொன்னும் வழங்குதல் நல்லது.

Scanned with CamScanner

பழிக்கு அஞ்சாமல் பிறர் பொருளைப் பற்றும் தொழில் புரிவோரின் விருப்பமொழிகளையும், அச்செயல் புரியும் சூதர்களையும் நீங்கி வாழ்தல் இனிமை தரும்.

24) வெல்வது வேண்டி ...

வெற்றிபெறவேண்டி சினம் கொள்ளாதவனின் தவம் இனியது.

தனக்கு இயன்ற அளவு எடுத்த செயலினை முடிப்பவனின் பொறுமை நன்மையானது.

இல்லாத ஒன்றை விரும்பி, ஏங்கி துன்புறாமல் உள்ளதைக்கொண்டு நல்லதைச் செய்தல் நன்மையாகும்.

25) ஐவாய வேட்கை ....

ஐம்புலன்களால் வரும் ஆசைகளை அடக்குதல் இனிமையானது.

கையின்கண் பொருள் பெறினும் கல்லாதவரை நீக்குதல் நல்லது.

நிலையற்ற அறிவும், மன் உறுதியும் இல்லாத மக்களை சேராது ஒழுகுதல் நன்மை தரும்.

26) நச்சித் தற் சென்றார் ....

ஒரு பொருளைப் பெற விரும்பி வந்த ஒருவரின் விருப்பத்தைச் சிதைக்காத மாட்சிமை இனியது.

மதிப்பில்லாத இடத்தில் வாழாமை நன்று.

27) தானம் கொடுப்பான் ....

அடைக்கலமாய் வந்தவருக்கு தானம் கொடுக்கும் தகுதியது தலைமை இனியது.

தமது மானம் கெடவந்தது எனில் வாழாமல் இறந்துபோதல் இனியது.

குற்றம் கொண்டு ஆடாமல் நல்லவற்றை மந்திற்கொள்ளுமாறு கொள்ளுதல் நல்லது.

28) ஆற்றானை ஆற்றென்று ....

ஒரு தொழிலைச் செய்ய இயலாதவனை அத்தொழிலைச் செய்ய வருத்தாமை நன்று.

இறப்பு நிகழும் என்ற நிலையாமை உண்மை உணர்ந்து வாழ்வது நல்லதாகும்.

தமது செல்வம் முற்றாக அழிந்தாலும் பிறரைப் பழிகூறாமல் வாழும் தெளிவினும் தெளிவு போல் இனிமை நல்குவது வேறொன்றுமில்லை.

29) கயவரைக் கைகழிந்து ....

குற்றமிழைக்கும் கீழ்மக்களை நீங்கி வாழ்தல் நல்லது.

மேம்பட்ட வாழ்வை எண்ணி ஊக்கம் கொள்ளுதல் சிறந்தது.

எவரையும் எளியர் இவரென இகழ்ந்துரையாமல் பெருமையுடன் வாழ்வது இனிமையானது.

Scanned with CamScanner

30) நன்றி பயன் தூக்கி வாழ்தல் ....

தமக்கு ஒருவர் செய்த நன்றியின் பயன் கருதி வாழ்தல் இனிமையானது.

சான்றோர் அவையில் அறத்திற்கு எதிரான ஒன்றை கூறாமலிருக்கும் மாட்சிமை நன்று.

யாரும் அறியார் என எண்ணி அடைக்கலப் பொருளை பறித்துக்கொள்ளாத நன்றி போல் மிக இனிது வேறொன்றில்லை.

********************

**முதுமொழிக்காஞ்சி - ஆசிரியர் – மதுரைக் கூடலூர் கிழார்**

என்றாவது ஒரு நாள் இவ்வுயிரும் உடலும் அழியக்கூடிய ஒன்று என்ற நிலையாமையை உணர்ந்து வாழும் காலத்தில் வாழ்வியல் அறத்தைப் பின்பற்றி நடத்தல் வேண்டும் என்ற நிலையாமைக் கொள்கைகளை வழங்குகிறது இந்நூல். இதில் ஏழாவதாக அமைந்துள்ள பொய்ப்பத்து நம் பாடப்பகுதியாகும். இந்நூலின் ஆசிரியர் மதுரைக் கூடலூர்கிழார் ஆவார்.

**(7) பொய்ப்பத்து**

1. **கடல் சூழ்ந்த இவ்வுலகில் பேரறிவு மிக்கவன் இன்பமாய் வாழான் என்பது பொய்யாகும். இன்பமாய் வாழ்வான்.**
2. **பெருஞ்செல்வம் படைத்தவன் சினம் கொள்வான்.**
3. **கள்ளுண்ணும் பழக்கமுடையவன் ஒழுக்கக் கேடானவனாவான்.**
4. **காலம் அறிந்து முயலாதவனுடைய செயல் முற்றுபெறாது.**
5. **எதிர்காலம் அறிந்து செயல்படாதவன் தன்னைப் பாதுகாத்தல் இயலாது.**
6. **தகுந்த செயலை செய்யாது வெறுத்து சோம்பியிருப்பவன் மேன்மை அடைவதில்லை.**
7. **சிற்றறிவு கொண்டவன் பெருமை அடைதல் இல்லை.**
8. **பெருமை எனும் சிறப்புப் பெற்றவன் சிறுமையுடையவனாய் வாழமாட்டான்.**
9. **பொருள் மீது மிகுந்த ஆசை கொண்டவன் அறவழியில் செல்லமாட்டான்.**
10. **தூய்மையான நெஞ்சம் இல்லாதவன் தவம் செய்தல் இயலாது.**

**அலகு – 4 நிறைவு பெற்றது.**

****************************************************************************

**அலகு – 5**

**அவ்வையாரின் ஆத்திச்சூடி**

Scanned with CamScanner

*அறக்கருத்துக்களை எளிய முறையில் மக்களுக்கு எடுத்துச்சொல்லும் ஆத்திச்சூடியை அவ்வையார் அறிமுகப்படுத்தினார். அகரவரிசையில் தொடங்கி 109 அடிகளில் குழந்தைகள் முதல் பெரியோர் வரை எளிதில் கற்றுணருமாறு பாடியுள்ளார்.*

*கடவுள் வாழ்த்து* - ஆத்தி சூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

1.**அறம் செய விரும்பு** - நீ அறச்செயல்களைச் செய்ய ஆவல் கொள்.
2. **ஆறுவது சினம்** - கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.
3. **இயல்வது கரவேல்** -
உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்குஒளிக்காது கொடு.
4. **ஈவது விலக்கேல்** - ஒருவர் மற்றவர்க்கு கொடுப்பதை, வேண்டாமென்றுதடுக்காதே.
5.**உடையது விளம்பேல்**- உன்னிடத்திலுள்ள பொருளை அல்லதுஇரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.
6. **ஊக்கமது கைவிடேல்**- எப்போதும் முயற்சியைக் கைவிடக்கூடாது.
7. **எண் எழுத்து இகழேல்**- கணித, இலக்கண நூல்களைத் தினமும் தவறாமல் நன்கு கற்க வேண்டும்.
8. **ஏற்பது இகழ்ச்சி**- இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக் கூடாது.
9. **ஐயம் இட்டு உண்**- யாசிப்பவர்கட்கு பிச்சையிட்டுப் பிறகு உண்ண வேண்டும்.
10. **ஒப்புரவு ஒழுகு**- உலக நடையை அறிந்துகொண்டு, அத்தோடு பொருந்துமாறுநடந்து கொள்.
11. **ஓதுவது ஒழியேல்** -நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக்கொண்டிரு.
12. **ஔவியம் பேசேல்** -ஒருவரிடமும் பொறாமை கொண்டு பேசாதே.
13.**அஃகஞ் சுருக்கேல்**-
அதிக இலாபத்துக்காக, தானியங்களை குறைத்து அளந்துவிற்காதே.
14.**கண்டொன்று சொல்லேல்**-
. கண்ணாற் கண்டதற்கு மாறாகப்(பொய் சாட்சி)சொல்லாதே.
15.**ஙப் போல் வளை** -. '**ங**' என்னும் எழுத்தானது எப்படி தான் பயனுள்ளதாக இருந்து தன் வருக்க எழுதுக்களைத்தழுவுகிறதோ அது போல நாமும் நம்மைச் சார்ந்தவர்களால் என்ன பயன் என்று பாராமல் அவர்களை காக்க வேண்டும்."ங"என்னும் எழுத்தை கூர்ந்து நோக்கினால், ஒருவர் வளைந்து வணக்கம் சொல்வதுபோல் உள்ளது விளங்கும். அதைப்போல பணிவாக பெரியவர் முன் வளையவேண்டும் என்று ஔவை உரைத்ததாகவும் எடுத்துக்கொள்ளலாம்.
16.*சனி நீராடு* -.சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும்.

17.**ஞயம்பட உரை**- கேட்பவருக்கு இன்பம் உண்டாகும் படி இனிமையாக பேசு.

Scanned with CamScanner

18.**இடம்பட வீடு எடேல்**-உன் தேவைக்கு மேல் வீட்டை பெரிதாக கட்டாதே.

19.**இணக்கம் அறிந்து இணங்கு** -ஒருவரிடம் நட்பு கொள்ளும் முன், அவர் நல்லகுணங்களும்,நல்ல செய்கைகளும் கொண்டவரா எனத் தெரிந்த பிறகு அவருடன்நட்பு கொள்ளவும்.

20.**தந்தை தாய்ப் பேண்** -உன் தந்தையையும் தாயையும் அவர்களுடைய முதுமைக் காலம் வரை அன்புடன் காப்பாற்று.

21.**நன்றி மறவேல்** - ஒருவர் உனக்கு செய்த உதவியை ஒரு போதும் மறவாதே.

22.**பருவத்தே பயிர் செய்** –

எச்செயலையும் அதற்குரிய காலத்திலேயே செய்யவேண்டும்.

23.**மண் பறித்து உண்ணேல்** -பிறர் நிலத்தை திருடி அதன் மூலம் வாழாதே

24.**இயல்பு அலாதன செய்யேல்** –

நல்லொழுக்கத்துக்கு மாறான செயல்களைச்செய்யாதே.

25.**அரவம் ஆட்டேல்**. -பாம்புகளை பிடித்து விளையாடாதே.

26.**இலவம் பஞ்சில் துயில்** -

இலவம் பஞ்சு' எனும் ஒரு வகை பஞ்சினால்செய்யப்பட்ட படுக்கையிலே உறங்கு.

27.**வஞ்சகம் பேசேல்** -

படச்(உண்மைக்கு புறம்பான,கவர்ச்சிகரமான) சொற்களைபேசாதே.

28.**அழகு அலாதன செய்யேல்** -.இழிவான செயல்களை செய்யாதே

29.**இளமையில் கல்**-

இளமை பருவத்தில் இருந்தே கற்கவேண்டியவைகளை(**இலக்கணத்தையும், கணிதத்தையும்**) தவறாமல் கற்றுக்கொள்.

30.**அறனை மறவேல்**. தருமத்தை எப்போதும் மறவாமல் செய்.

31.**அனந்தல் ஆடேல்**- மிகுதியாக துங்காதே.

32.**கடிவது மற**-யாரையும் கோபத்தில் கடிந்து பேசிவிடாதே.

33.**காப்பது விரதம்**- தான் செய்யத் தொடங்கிய தருமத்தை விடாமல் செய்வதேவிரதமாகும் (**அல்லது**) பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் அவற்றைக்காப்பாற்றுவதே தவம் ஆகும்.

34.**கிழமை பட வாழ்**-உன் உடலாலும் பொருளாலும் பிறருக்கு நன்மை செய்துவாழ.

35. **கீழ்மை யகற்று**-இழிவான குணஞ் செயல்களை நீக்கு.

36. **குணமது கைவிடேல்**- நன்மை தரக்கூடிய நல்ல குணங்களை பின்பற்றுவதைநிறுத்திவிடாதே(கைவிடேல்).

37. **கூடிப் பிரியேல்**- நல்லவரோடு நட்பு செய்து பின் அவரை பிரியாதே.

38. **கெடுப்ப தொழி** -பிறருக்கு கேடு விளைவிக்கும் செயல்களை செய்யாதே.

39. **கேள்வி முயல்**-கற்றவர் சொல்லும் நூற் பொருளை கேட்பதற்கு முயற்சி செய்.

40. **கைவினைக் கரவேல்**-

உங்களுக்கு தெரிந்த கைத்தொழிலைமற்றவர்களிடமிருந்து ஒளியாமற் செய்து கொண்டிரு..

41. **கொள்ளை விரும்பேல்**- பிறர் பொருளை திருடுவதற்கு ஆசைப்படாதே.

Scanned with CamScanner

42. **கோதாட் டொழி**-குற்றமான விளையாட்டை விட்டு விடு.

43.**கௌவை அகற்று**-வாழ்வில் செயற்கையாக ஏற்படும் துன்பத்தை நீக்க.

44. **சக்கர நெறி நில்**- அரசன் வகுத்த நெறிப்படி வாழ வேண்டும்.
( அரசன் =ஆள்பவர், தலைவர் ).

45.**சான்றோ ரினத்திரு**-அறிவொழுக்கங்ளில் நிறைந்த பெரியோர்களுடன் சேர்ந்துஇரு.

46. **சித்திரம் பேசெல்**- பொய்யான வார்தைகளை மெய் போல்ப் பேசாதே.

47. **சீர்மை மறவேல்**- புகழுக்குக் காரணமான நல்ல குணங்களை மறந்துவிடாதே.

48. **சுளிக்கச் சொல்லேல்**-

கேட்பவருக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகும் படிபேசாதீர்.

49. **சூது விரும்பேல்**- ஒருபொதும் சூதாட்டத்தை விரும்பாதே.

50. **செய்வன திருந்தச் செய்** -

செய்யும் செயல்களைத் தவறோ குறையோ ஏதும்இல்லாமல் செய்யவும்.

51.**சேரிடமறிந்து சேர்**

- பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடயவர்களா என நன்குஆராய்ந்து

பின்பு அவர்களுடன் பழகு.

52. **சையெனத் திரியேல்**-பெரியோர் 'சீ' என வெறுக்கும் படி வீணாய்த் திரியாதே.

53. **சொற்சோர்வு படேல்**- பிறருடன் பேசும் பொழுது மறந்தும் குற்றமுண்டாகப்பேசாதே

54. **சோம்பித் திரியேல்**-முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே.

55. **தக்கோ னெனத்திரி**-

பெரியோர்கள் உன்னைத்தக்கவன்(யோக்கியன்,நல்லவன்) என்று புகழும்படி *நட*.

56. **தானமது விரும்பு** - யாசிப்பவர்களுக்கு தானம் செய்.

57. **திருமாலுக்கு அடிமை செய்** - நாராயணமூர்த்திக்குத் தொண்டு செய்.

58. **தீவினை யகற்று** - பாவச் செயல்களைச் செய்யாமல் இரு.

59.**துன்பத்திற் கிடங்கொடேல்**-

முயற்சி செய்யும் பொழுது வரும் உடம்பின்வருத்தத்திற்கு அஞ்சி
அதனை விட்டு விடாதே.

60. **தூக்கி வினைசெய்**-

ஒரு வேளையை முடிப்பதற்க்கான் வழிமுறைகளைநன்கு ஆராயிந்து அறிந்து பின்பு அச் செயலை செய்யத தொடங்கவும்.

61. **தெய்வ மிகழேல்**-கடவுளை பழிக்காதே.

62. **தேசத்தோ டொத்துவாழ்**- உன் நாட்டில் வசிக்கும் மக்களுடன் பகைஇல்லாமல் வாழ்

.63. **தையல்சொல் கேளேல்**-மனைவி சொல் கேட்டு ஆராயாமல் நடவாதே.

64. **தொன்மை மறவேல்**- பழமையாகிய நட்பினை மறந்துவிடாதே.

Scanned with CamScanner

65. **தோற்பன தொடரேல்**-

ஒரு செயலைச் செய்தால் தோல்வியில் தான் முடியும்எனத் தெரிந்தே அதை தொடங்காதே.

66. **நன்மை கடைப்பிடி**-

நல்வினை செய்தலை எவ்வளவு இடையுறு வந்தாலும்உறுதியாகத் தொடரவும்.

67. **நாடொப் பனசெய்**- நாட்டில் உள்ள பலரும் ஒத்துக்கொள்ளத்தக்க நல்லகாரியங்களைச் செய்.

68. **நிலையிற் பிரியேல்**-

உன்னுடைய நல்ல நிலையில் இருந்து என்றும் தாழ்ந்துவிடாதே.

69. **நீர்விளை யாடேல்**-வெள்ளத்தில் நீந்தி விளையாடாதே.

70. **நுண்மை நுகரேல்**-நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே.

71. **நூல்பல கல்**- அறிவை வளர்க்கும் பல நூல்களைப் படி.

72.**நெற்பயிர் விளை**- நெற்பயிரை விளையச் செய்வதை உன் வாழ்க்கைதொழிலாகக் கொண்டு வாழ்.

73. **நேர்பட வொழுக**- ஒழுக்கந் தவறாமல் நேர்வழியில் நட.

74. **நைவினை நணுகேல்**-பிறர் வருந்தத் தகுந்த தீ வினைகளைச் செய்யாதே.

75. **நொய்ய வுரையேல்**-பயன் இல்லாத அற்ப வார்த்தைகளைப் பேசாதே.

76. **நோய்க்கிடங் கொடேல்**-

மிகுந்த உணவு உறக்கம் முதலியவற்றால் நோய்க்குவழிவகை செய்யாதே.

77. **பழிப்பன பகரேல்**-

பெறியோர்களால் பழிக்கப்படும் இழிவான சொற்களானபொய்,கடுஞ்சொல் ஆகியவற்றைப் பேசாதே.

78. **பாம்பொடு பழகேல்**-பாம்புபோல கொடிய குணம் கொண்டவர்கள் உடன்பழகாதே.

79. **பிழைபடச் சொல்லேல்**-குற்றம் உண்டாகும் படி எதையும் பேசாதே.

80. **பீடு பெறநில்**-பெறுமையை அடையும் படியான நல்ல நிலையிலே நில்.

81. **புகழ்ந்தாரைப் போற்றி வாழ்**-உன்னையே நம்பியவர்களை காப்பாற்றி வாழ்.

82. **பூமி திருத்தியுண்**-

விளைநிலத்தை உழுது அதில் பயிர்செய்து உண்.(அ)விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்.

83. **பெரியாரைத் துணைக்கொள்**-

அறிவிலே சிறந்த பெரியோர்களை உனக்குத்துணையாகப் பேணிக்கொள்.

84. **பேதைமை யகற்று**-அறியாமையை போக்க.

85. **பையலோ டிணங்கேல்**-அறிவில்லாத சிறுவனோடு கூடித் திரியாதே.

86. **பொருடனைப் போற்றிவாழ்** - பொருள்களை வீண் செலவு

Scanned with CamScanner

செய்யாமற் பாதுகாத்து வாழ்.

87. **போர்த்தொழில் புரியேல்**-யாருடனும் தேவையில்லாமல் சண்டை போடுவதை ஒரு வேலையாகச் செய்யாதே.

88. **மனந்தடு மாறேல்**-எதனாலும் மனக்கலக்கம் அடையாதே.

89. **மாற்றானுக் கிடங்கொடேல்**-
பகைவன் உன்னை துன்புறுத்தி உன்னைவெல்வதற்கு இடம் கொடுக்காதே.

90. **மிகைபடச் சொல்லேல்**- சாதாரணமான விஷயத்தை மாயாஜால வார்த்தைகளால் பெரிதாகக் கூறாதே.

91. **மீதூண் விரும்பேல்**-மிகுதியாக உண்ணுதலை விரும்பாதே.

92. **முனைமுகத்து நில்லேல்** -
எப்போதும் யாருடனாவது சண்டையிடுவதற்காகபோர் முனையிலே நிற்காதே.

93. **மூர்க்கரோ டிணங்கேல்** - மூர்க்க குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.

94. **மெல்லினல்லாள் தோள்சேர்**-
பிற மாதரை விரும்பாமல் உன் மனைவியுடன்மட்டும் சேர்ந்து வாழ்.

95. **மேன்மக்கள் சொற்கேள்**-
நல்லொழுக்கம் உடைய பெரியோர் சொல்லைக்கேட்டு நட.

96. **மைவிழியார் மனையகல்** - விலைமாந்தர் உடன் உறவு கொள்ளாமல் விலகிநில்.

97. **மொழிவ தறமொழி**-சொல்லப் படும் பொருளை சந்தேகம் நீங்கும் படி சொல்.

98.**மோகத்தை முனி**-நிலையில்லாத பொருள்களின் மேலுள்ள ஆசையைவெறுத்திடு.

99. **வல்லமை பேசேல்**-உன்னுடைய சாமர்தியத்தை நீயே புகழ்ந்து பேசாதே.

100. **வாதுமுற் கூறேல்**-பெறியோர்கள் இடத்தில் முறன் பட்டு வாதிடாதே.

101. **வித்தை விரும்பு**- கல்வியாகிய நற்பொருளை விரும்பு.

102. **வீடு பெறநில்**-முக்தியை பெறுவதற்க்கான சன்மார்கத்திலே வாழ்க்கையைநடத்து.

103. **உத்தமனாய் இரு**-உயர்ந்த குணங்கள் கொண்டவனாக் வாழு.

104. **ஊருடன் கூடிவாழ்**-ஊராருடன் நன்மை தீமைகளில் கலந்து வாழ்.

105. **வெட்டெனப் பேசேல்**-யாருடனும் கத்தி வெட்டுப் போலக் கடினமாகபேசாதே.

106. **வேண்டி வினைசெயேல்**- வேண்டுமென்றே தீய செயல்களைச் செய்யாதே.

107. **வைகறை துயிலெழு**- நாள்தோறும் சூரியன் உதிக்கும் முன்பே தூக்கத்தில்இருந்து எழுந்திரு.

108. **ஒன்னாரைத் தேறேல்**-பகைவர்களை நம்பாதே.

109. **ஓரஞ் சொல்லேல்**-
எந்த வழக்கிலும் ஒருபுடைச் சார்பாக பேசாமல்நடுநிலையுடன் பேசு.

**************************

Scanned with CamScanner

## பாரதிதாசனின் ஆத்திச்சூடி

1. அனைவரும் உறவினர் - எலோரும் நமது உறவினரே.
2. ஆட்சியைப் பொதுமைசெய் – அரசாட்சி என்பதை அனைவருக்குமானதாக்கு.
3. இசைமொழி மேலதே – இசையின் மொழிமேன்மையானது.
4. ஈதல் இன்பம் – கொடுப்பது இன்பம் நல்கும்.
5. உடைமை பொதுவே – எல்லா உடைமைகளும் எல்லாருக்குமாகும்.
6. ஊன்றுளம் ஊறும் - ஆழமாய்ச் சிந்திக்க கருத்துக்கள் ஊறிப்பெருகும்.
7. எழுது புதிய நூல் - புதிய கருத்துக்களை நூலாகப் படைக்கவேண்டும்.
8. ஏடு பெருக்கு – நிறைய நூல்களை உருவாக்க வேண்டும்.
9. ஐந்தொழிற்கு இறை நீ - ஆக்கல், காத்தல், இயற்றல், மாற்றல், அருளல் ஆகிய ஐந்தொழிற்கும் நீயே தலைவனாம்.
10. ஒற்றுமை அமைதி - ஒற்றுமையாக இருப்பதே அமைதி நல்கும்.
11. ஓவியம் பயில் - ஓவியம் படைக்கக் கற்றுக்கொள்.
12. ஔவியம் பெருநோய் - பொறாமை குணம் பெரிய நோயாகும்.
13. கல்லார் நலிவர் - கல்வியற்றவர் மேன்மையடைய இயலாது.
14. காற்றினைத் தூய்மைசெய் - காற்றுமாசு ஏற்படுத்தல் ஆகாது.
15. கிழிப்பொறி பெருக்கு - துணிநெய்யும் ஆடைகளை உருவாகு.
16. கீழ்மகன் உயர்வெனும் - பிறப்பால் உயர்வு பேசுபவன் அறிவற்றவனாவன்.
17. குள்ள நினைவுதீர் - சிறியனவற்றை சிந்தியாதே.
18. கூன்நடை பயிலேல் - குறுகி நடத்தல் ஆகாது.
19. கெடு நினைவு அகற்று - கெட்ட எண்ணங்களை விட்டொழி.
20. கேட்டு விடையிறு - பிறர் கருத்தைக் கேட்ட பின்பு விடைகூறு.
21. கைம்மை அகற்று - கைம்மை நிலையகற்றி கைம்பெண்ணை மணந்துகொள்.
22. கொடுத்தோன் பறித்தோன் – கொடுப்பவன் முன்பு பொருளைப் பறித்தவனே.
23. கோனாட்சி வீழ்த்து - மன்னராட்சியை ஒழித்துவிடு.
24. சதுர்பிறர்க்கு உழைத்தல் - பிறருக்கு உழைப்பதே ஆற்றலாகும்.
25. சாதல் இறுதி - எல்லாருக்கும் கடைசியில் சாவு வருவது உறுதி.
26. சிறார் நலம்தேடு - குழந்தைகள் நலம் வாழ வழி செய்.
27. சீர்பெறல் செயலால் - செயலபாடுகளால் பெருமை பெறு.
28. சுவைஉணர் திறங்கொள் - புதிய சுவைகளை அறியும் திறம் கொள்.
29. சூழ்நிலை நோக்கு - சூழல்களை அறிந்து கொள்.
30. செல்வம் நுண்ணறிவாம் - நுட்பான அறிவுதான் செலவமாகும்.
31. சேய்மை மாற்று - தொலைவை அகற்றும் வழி காண்.
32. சைகையோடு ஆடல் சேர் - அபிநயத்துடன் ஆடல் பயில்வாய்.
33. சொற்பெருக்கு ஆற்றல் கொள் - சொற்பொழிவு ஆற்றலை வளர்த்துக்கொள்.
34. சோர்வு நீக்கு - சோம்பி இருக்காதே.
35. தளையினைக் களைந்து வாழ் - அடிமைத்தனத்தை விலக்கு.
36. தாழ்வு அடிமை நிலை - தன்னைத் தாழ்வாக எண்ணுவது அடிமையாகும்.
37. திருஎனல் உழுபயன் - உழவுத்தொழிலால் கிடைப்பது செல்வமாகும்.
38. தீங்கனி வகைவிளை - இனிய கனிகளை விளைவிக்க வேண்டும்.
39. துன்பம் இன்பத்தின் வேர் - துன்பமே இன்பத்தின் வேராகும்.
40. தூய நீராடு – தூய்மையான நீரில் நீராடு.
41. தெருவெல்லாம் மரம் வளர் - எங்கும் மர்ங்களை நட்டு வளப்பாயாக.
42. தேன்எனப் பாடு - தேனினும் இனிதாய்ப் பாடு.
43. தைக்க இனிது உரை - உள்ளம் ஈர்ப்பது போல் பேசு.
44. தொன்மை மாற்று - புதுமைகளை உருவாக்கு.
45. தோல்வி ஊக்கம்தரும் - தோல்வி வெற்றிக்கான வழியைத் தரும்.
46. நடுங்கல் அறியாமை - அஞ்சுவது அறியாமையாகும்.
47. நால்வகைப் பிறவிபொய் - நான்கு வகை சாதி பொய்யாகும்.
48. நினைவினில் தெளிவுகொள் - நினைவாற்றலை வளர்த்துக்கொள்.
49. நீணிலம் உன் இல்லம் - உலகம் உன்னுடையது.

Scanned with CamScanner

50. நுண்ணிதின் நுண்மை தேர் - நுட்பமானவற்றிலும் நுட்பமானவற்றை அறிந்துகொள்.
51. நூலும் புளுகும் - நூல்களும் பொய்யுரைக்கும்.
52. நெடுவான் உலவு - பறவையைப் போல் பற.
53. நேர்பயில் ஆழ்கடல் - கடல் பற்றிய அறிவைப் பெறு.
54. நைந்தார்க்கு உதவிசெய் - ஆதரவற்றவருக்கு உதவி செய்.
55. நொடி தோறும்புதுமைசேர் - ஒவ்வொரு நொடியிலும் புதுமைகளைப் படைப்பாய்.
56. நோய் தீயொழுக்கம் - நோயுடன் வாழ்வது தீய ஒழுக்கமாகும்.
57. பல்கலை நிறுவு - பல்வேறு கலைகளை உருவாக்கு.
58. பார்ப்பு பொதுப்பகை - பார்ப்பனீயம் எல்லோருக்கும் பகை.
59. பிஞ்சு பழாது - அறிவற்றவன் பயன்படமாட்டான்.
60. பீடு தன்மானம் - பெருமைதான் தன்மானமாகும்.
61. புதுச்சுவை உணவுகாண் - புதிய சுவை உணவுகளை உருவாக்கு.
62. பூப்பின் மணங்கொள் - பருவம் எய்திய பின் மணந்துகொள்.
63. பெண்ணோடு ஆண்நிகர் - பெண்ணும் ஆணும் இணையானவர்கள்.
64. பேயிலை மதலால் - மதம் இல்லையேல் பேயும் இல்லை.
65. பைந்தமிழ் முதல்மொழி - பசுமையான தமிழே நமது முதல் மொழியாகும்.
66. பொழுதென இரவுகாண் - இரவைப் பகலாக்கும் வெளிச்சம் செய்.
67. போர்த்தொழில் பழகு - எல்லாவகைப் போர்த்தொழிலையும் கற்பாய்.
68. மறைஎனல் சூழ்ச்சி - வேதம், சாதிரம் என்பதெல்லாம் சூழ்ச்சியாகும்.
69. மாறுவது இயற்கை - இயற்கை மாறிக்கொண்டே இருக்கும்.
70. மிதியடியோடு நட - மிதியடியணிந்து நடக்க வேண்டும்.
71. மீச்செலவு தவிர் - தேவையற்ற கூடுதல் செலவுகளைத் தவிர்திடு.
72. முகச்சரக்காய் வாழ் - எடுத்துக்காட்டாக வாழ்ந்திடு.
73. மூப்பினுக்கு இடம்கொடேல் - இளமையாய் இரு.
74. மெய்கழிவு அயற்கின்னா - கண்ட இடங்களிலும் சிறுநீர் போன்றன கழித்தல் பிறருக்குத் துன்பமாகும்.
75. மேலை உன்பெயர் பொறி - புகழ் பெற்று வாழ்.
76. மையம் பாய்தல் தீர் - வென்றவரைப் பார்த்து மனம் மாறாதே.
77. மொடுமாற்றுப் பொது இன்னா - கொள்ளை லாபம் கொண்டு விற்பனை செய்யாதே.
78. மோத்தலில் கூர்மை கொள் - முகர்ந்து பார்த்தலில் திறமை கொள்.
79. வறுமை ஏமாப்பு - ஏமாற்றமே வறுமைக்குக் காரணமாகும்.
80. வாழாட்கு வாழ்வு சேர் - கணவனை இழந்த பெண்ணுக்கு வாழ்வு கொடு.
81. விடுதலை உயிர்க்குயிர் - சாதி, மத, பேதங்களிலிருந்து விடுதலை கொள்.
82. வீடு எனல் சாதல் - சாவுக்குப் பின் ஒன்றுமில்லை.
83. வெறும் பேச்சு பேசேல் - வெற்றுப் பேசுக்களைத் தவிர்.
84. வேளையோடு ஆர உண் - காலத்தோடு பசித்தபின் உண்.
85. வையம் வாழ வாழ் - உலக மக்களுக்கு தொண்டாற்றிட வாழ்வாயாக.

அலகு - 5 ---- நிறைவுற்றது.

**************************************************************************************

Scanned with CamScanner